அ.வ.எண். 60/2017 நாள்: 20.08.2026

பி.சா.4 திரு.பாபுக்குமார்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) தாவா சொத்துகள் அனைத்தும் கோவிலுக்கு பாத்தியப்பட்டு வாதியின் அனுபோகத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் அனுபோத்தில் உள்ளது. தாவா சொத்துகள் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதா என்றால் இல்லை. பிரதிவாதிகள் தாவா சொத்திற்கு குத்தகைதாரர் அல்ல என்றால் சரியல்ல. குத்தகைதாரர் என்பதற்கு அரசாங்கத்தால் வழுங்கப்பட்ட ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.Sc படித்துள்ளேன். என்ன வேலை செய்கிறேன் என்றால் விவசாயம் மற்றும் எலக்ரிசியன் வேலை செய்கிறேன். கடைக்கு வேலைக்கு செல்கிறேனா என்றால் இல்லை. எனக்கு சொந்தமாக நிலம் உள்ளதா என்றால் இல்லை. எனது பாட்டி பெயரில் உள்ளது. எனக்கு சகோதரர்கள் இருக்கிறார்கள் அவர்களும் விவசாயம்தான் செய்கிறார்கள். எனது அப்பா பெயரில் சொந்தமாக நிலம் உள்ளதா என்றால் 100 குழி நிலம் உள்ளது. அவர் சாகுபடி செய்துவருகிறார்.

2) 3–ம் பிரதிவாதி மனைவி ராஜம் பெயரில் சொத்துகள் உள்ளதா என்றால் உள்ளது, அதன் புல எண் தெரியாது. அது புஞ்சை நிலம் ஆகும். நெல் சாகுபடி செய்யும் நிலம் ஆகும். நஞ்சை நிலத்தில் மாணாவாரி பயிர் செய்வார்கள், அதில் மரங்கள் பலவகை செடிகள் வளரும். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை யார் கூறியது என்றால் நான் தான் கூறினேன். வீரமணி சாகுபடி செய்வதாக நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள நிலத்தின் புல எண் என்ன என்றால் எனக்கு தெரியாது. 1–ம் பிரதிவாதி சாகுபடி செய்வதாக நான் குறிப்பிட்டுள்ள நிலத்தின் புல எண் என்ன என்றால் 185, உட்பிரிவு எண் எனக்கு தெரியாது. புல எண். 185 மொத்த விஸ்தீரணம் மேற்படி புல எண்ணில் எனக்கு தெரிந்து கடந்த 20 வருடங்களாக கருவை மரம் உள்ளது. சாகுபடி கிடையாது. வீரமணி சாகுபடி செய்வதாக நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள நிலத்தின் புல எண் என்ன என்றால் 258 மேற்படி நிலத்தில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக கருவை மண்டியுள்ளது, சாகுபடி எதுவும் இல்லை.

3) நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள தாவா புல எண்கள் சம்பந்தமாக பிரதிவாகிதள் குத்தகைதாரர்கள் என்பதற்கு எந்த ஒரு ஆவணத்தையும் நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். பட்டா என்றால் என்ன என்று தெரியுமா என்றால் அனுபோகதாரரை குறிக்கும். நிலத்தின் உரிமையாளரை குறிப்பிடுவதற்கு என்ன பெயர் என்றால் அவர் பெயரில்

பத்திரம் செய்யப்பட்ட கிரைய ஆவணம் ஆகும். தாவா சொத்துகள் வாதியின் சுவாதீனத்திலும் அனுபோத்திலும் தான் உள்ளது என்று பிரதிவாதிகள் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள், நான் அனைவரும் ஒரே தெருவில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதியின் அப்பா பெயர் என்ன என்றால் ராமசாமி ஆகும். 1–ம் பிரதிவாதி தகப்பனார் தாவா முதல் இன சொத்தை சாகுபடி செய்து வந்தார் என்பதற்கும் குத்தகைதாரர் என்பதற்கும் ஆவணம் எதையும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

S.d/Babukumar

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.08.20 19:41:22 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU